மார்ச் 2012
MARCH 2012
5 - 11
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

மாத இதழ்
The Spring

கவித்தூறல்கள்



திரும்பி வந்துவிடு.., என் (வளைகுடா) துணைவா...!



மகளிர் சிறப்பிதழ்!

## ஓங்கட்டும் வனிதையரின் மேன்மை..!
## ஒழியட்டும் அவர்மீதான வன்மை..!!



மனத்தில் மட்டுமா, கறை..?



மனங்களை மணக்கச் செய்யுங்கள்..!

ஆண் - பெண் நட்பு ஒழுக்கத்துக்கு கேடு!

துணையின் புரிதல்..,



வளர்க்கும் காதல்..!

இலவச வெளியீடு
جمعية النجاة الخيرية
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# பரஸ்பர தயாளம்..!
# இறைகருணைக்கு அடித்தளம்..!!



...நீங்கள் உங்களுக்கிடையில் தயாள குணத்துடன் நடந்துகொள்ள மறந்துவிட வேண்டாம்! நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதனைத்தையும் உற்று நோக்கியவனாக இருக்கின்றான்.

-திருக் குர்ஆன் 2: ..237

# வசந்தம்

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
March 2012 மார்ச் 2012
மலர் 5 இதழ் 11



**Chief Patron**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

**General Supervisor**
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

**Editor**
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

**Editorial Board**
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

**Initial Lay-out**
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Belal
நாதிர் பிலால்

Zukhruf Advertising Agency
www.zukhruf.net



**PUBLISHER**
வெளியீடு
IPC
ISLAM PRESENTATION COMMITTEE



**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97266683-97848068
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

**WEBSITE** வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com


**SOCIAL WEBSITES** சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook
twitter
www.twitter/vasantham2k
YouTube
Scribd






பக்கம் 15
பக்கம் 4
பக்கம் 13
பக்கம் 12
பக்கம் 8
பக்கம் 17


அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்




**வாழ்க்கை**
12 A.H. ஃபாத்திமா ஜனூஃபா
இல்லறத்தை போற்றும் துணை இழக்கப்பட்டால், பாரம்பர்யத்தின் பெயரால் தடை காணாது அதனை மீண்டும் பெற மறுமணம் ஊக்குவிக்கப்பட வேண்டும்..!

2 **வாசகர் சுகந்தங்கள்**
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

3 **தலையங்கம்**
ஆசிரியரிடமிருந்து..!

8 **பண்பாடு**
இளவேனில்

10 **IPC வழித்தடங்கள்**
அப்துல்லாஹ்

13 **ஒழுக்கம்**
ஜோதிர்லதா கிரிஜா

15 **கவித்தூறல்கள்**
தமிழக சகோதரி


16 **மழலையர் சோலை**
சவுந்தர்யம்

18 **வனிதையர் பக்கம்**
அபூமதீஹா


19 **சுற்றத்து செய்திகள்**
அழகிய சிறியவன்

20 **சிறப்பு அறிவுப் போட்டி!**

17 **விருந்தினர் பக்கம்**
ஜெ.ஜெயலலிதா



4 **முகப்புக் கட்டுரை**
மு.அ.அப்துல் முஸவ்விர்
**ஒங்க வேண்டும் வனிதையரின் மேன்மை..!**
**ஒழிய வேண்டும் அவர்மீதான வன்மை..!!**
*மகளிர் மீதான வன்கொடுமைச்சரம்..! இதனைத் தீர்க்க அழகிய மார்க்கம் பதிக்கின்றது உன்னத வழிமுறைத்தடம்!*


بـريـد الـربـيـع - كـلـمـة الـعـدد- الـظـلـم عـلـى الـنـسـاء وحـلـه في الإسـلام
- آداب اللباس- ولا تنسؤ الفضل بينكم -أنشطة اللجنة- حث الزواج من الأرملة
- مـضـرات اخـتـلاط الـنـسـاء بـالـرجـال- حـقـوق المـرأة (نـشـيـدة)
– صـفـحـة الأطـفـال- صـفـحـة الـنـسـاء- أخـبـار العـالم-مـسـابـقـة

# மார்க்க வழியில் தேசப்பற்று போற்றும் வசந்தம்.!




வசந்தம் ஃபிப்ரவரி 2012 இதழ் கண்டேன்!தேசீய நலனில் முஸ்லிம்களின் பங்கு குறித்த அகார் அவர்களின் உரையை சில காலம் முன்னர் கேட்டிருந்தாலும் எழுத்து வடிவில் வசந்த வரிகளாய் வாசித்தபோது, மாநாட்டு நிகழ்வுகள் என் கண் முன் விரிந்தது. எமது நம்பிக்கை ஆழத்தை இன்னும் அழகாய் வலுப்படுத்தும் வசந்தம், மார்க்க வழியில் தேசநலனை படம் காட்டியது போற்றுதலுக்குரியது.

முஹம்மத் ரம்ஸி
கலுதர - இலங்கை
ஃபர்வானியா - குவைத்

வசந்தம் ஜனவரி 2012 இதழ் கண்டேன். உணர்வுகளை மதிக்கச் சொல்லும் ஆசிரியர் தலையங்கம் அழகிய சிந்தனை!அயல்தேசத்து அநாதைகள் கவிதை அழகிய ஆக்கம். அர.ஃபாவின் சாதனைகள் அரிதான தகவல்.


அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா - குவைத்

வசந்தம் ஜனவரி 2012 இதழ் கண்டேன். முகப்புக் கட்டுரை தந்த தொலைக்காட்சித் தொடர்கள் பற்றிய தகவல், இன்றைய காலச் சூழலுக்கு மிகவும் பொருத்தமானது.

மனிதனின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய வகையில்,சமூகத்துக்கு உகந்த வகையில் நிகழ்ச்சிகளை வழங்கும் ஊடகங்களுக்கு மத்தியில், ஆபாசம்,வன்மம் என்று சீரழிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் பெருமளவில் வருகின்றன.நல்லதை மட்டும் வாழ்க்கைக்கு எடுத்துக்கொண்டு, அல்லதை.. கெட்டதை தூக்கி எறிந்து ஊடகங்களை முற்றிலும் நல்லவையாக மாற்ற துணைபோவோம்.




## மின்னஞ்சலில்..!



வரவர வசந்தம் மெருகு கூடுகின்றது. செய்திகள்,கட்டுரைகள் பயனுள்ளவையாக இருக்கின்றன.சமூகவலைதளத்தில் வந்ததிலிருந்து பலருக்கும் எளிதாய் போய் சேருகின்றது.குறிப்பாக ஃபிப்ரவரி இதழை படம் மற்றும் Unicode வடிவில் ஒரே நேரத்தில் தந்தமை சமூகவலைதள அமைப்பில் ஒரு நல்ல முன்னுதாரணம்.இதன் மூலம் படத்தை அருகில் வைத்துக்கொண்டே தொடர்புடைய ஆக்கங்களை வாசித்துக்கொள்ள முடிகின்றது.கண்ணீர் வரவழைத்துவிட்டது கவித்தூறல்கள்!இருபது பக்கங்களில் இத்தனை செய்திகள்..! மாஷா அல்லாஹ்..!

அஹ்மத் நிஸார்-இராமகிருஷ்ணன்-ஹபீபுல்லாஹ்-ரஹ்மத்துல்லாஹ்-அல்தாஃப்-அப்துர் ரஹ்மான்

(அயல்தேசத்து அநாதைகளான ஒரே அறை தோழர்கள்)
துபை

பாகிஸ்தான் இளந்தளிருக்கு இளவேனில் செலுத்திய அஞ்சலி கட்டுரை அர.ஃபாவின் சாதனைகளை



மனம் நெகிழச் செய்த அதே வேளை மரணம் பற்றிய இறையச்சத்தையும் எம்மில் தோற்றுவித்தது.


J. அப்துல் ஜலீல்
கடியாச்சேரி-தமிழகம்
மங்கஃப்-குவைத்

அயல்தேசத்து... கவிதையின் வரிகள் எம் மனத்தைக் கணக்கச் செய்தது என்றால், தலையங்க 'உணர்வு..... வரிகள் எம்மை நெகிழச் செய்துவிட்டது.


T. நியாஸ் அஹமத்
அபிவிருத்தீஸ்வரம் - தமிழகம்
மங்கஃப் - குவைத்

## ஃபேஸ்புக்கில்..!

facebook



@ Mohamed Ali Kollapuram வசந்தம்.., நீ என்னருகில்..!என் சோகம் வெகு தொலைவில்.!



@Riyaz Habeeb Rahman அழகு!

விருப்பம்

@Mohamad Rouf
@Mohamed Rahmathullah
இன்னும் பலர்..!

## ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!

sameh shaker @ideas4islam
Kalai @Kalai_
Tamil Now @tamilnow
A.R.Rahman @arrahman
maruthupandian @mmpandian
இன்னும் பலர்..!

# காத்திருக்கும் சோதனைகள்..! மீளச் செய்யும் இறைநியதிகள்..!!

மனித வாழ்வே எதிர்பாராத திருப்பங்களின் தொடர்கதைகள்..!அதில் காத்திருத்தல் என்பது திருப்பங்கள் தரும் நிகழ்வுகளின் அத்தியாயங்கள்..!அந்த அத்தியாயங்களின் ஒவ்வொரு வரிகளும் நம்மை சோதிக்கும் பாடங்கள்..!

பெற்ற அன்னையின் உடல்நிலை மிகவும் அபாய நிலையில் இருக்கும் செய்தி, என்னை திடீரென்று தாய்நாட்டு விஜயத்துக்கு ஆளாக்கியது. சென்னையில் பனிமூட்டம், அங்கு விமான நிலையத்தையே மூடவைத்துவிட்டது. ஆதலால், வானத்தில் வட்டமிட்டுக் கொண்டும், அண்டை நாட்டு விமானநிலையத்தில் எரிபொருள் நிரப்பியும் காலத்தை கரைக்கச் செய்து கொண்டிருந்தார் விமானி!அனைத்தும் இறைநாட்டமே எனும் தவக்குல் ஒருபுறம்..,என்னைப் பெற்றவளை அவர்தம் இறுதிமூச்சு முடியும் முன்னர் காணுவேனா என்பது போன்ற மனத்தை குலைக்கும் மனிதஇயல்பு எண்ணங்கள் மறுபுறம் மாறி மாறி தாக்க.. இறுதியில்., தாயைக் காணும் நிர்ணயிக்கப்பட்ட பயண நேரத்தைவிட, ஏறத்தாழ பதிநான்கு மணிநேரம் தாமதித்து தாய்நாட்டை அடைந்தேன்.

விமானநிலையத்திலிருந்து நேரே மருத்துவமனைக்கு சென்று தாயைக் கண்டு கண்குளிர்ந்து நிம்மதி அடைந்தேன். அனைத்து இரத்தங்களும் உடனிருக்க நான் ஒருவன் மட்டும் இல்லாத குறை நீங்கக் கண்டவுடன் பெற்றவரின் கண்களில்தான் எத்துணை ஆனந்தம்..!இறைவன் வெறுமனவா சொன்னான் தாயின் பாதங்களில் சுவனம் இருக்கின்றதென்று!புகழனைத்தும் இறைவனுக்கே..! (அதன் பின்னர் ஒன்பது நாட்கள் கழிந்து என்னைப் பெற்றவர் காலமானார். (இன்னாலில்லாஹி...-இறைவன் அவர் பிழைகளைப் பொறுத்து அவருக்கு சுவனப்பேற்றை வழங்குவானாக.!)

உடல்நிலை சரியில்லாத என் தாயைக் காணும் வரை..,இறுதிநேர பயணச்சீட்டு வாங்குதல், இக்கட்டான நேரத்தில் விமான தாமதம் என்று பல அம்சங்கள் நிகழ்ந்த அந்த காத்திருப்பில்.., அவரக் காண நானும், என்னைக் காணும் அவாவில் என் தாயின் உடல் அசதி மீறிய புத்துணர்வும் அடைந்த காத்திருப்புக்கள் எனக்கு உணர்த்திய பல செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள நாட்டம்!

காத்திருப்பு என்பது எத்துணை பெரிய பொறுமைச் சாட்டியம் என்பது அப்போது எனக்குப் புரிந்தது. அதுவும் குறிப்பிட்ட ஒரு நிகழ்வு எமது வருகையை கட்டாயமாக்கி நிறுத்தும்போது..,அல்லது நிகழ்வுகளோ அல்லது தேவையானவரோ எமது இருப்பை நோக்கியதாக இருக்கும்பட்சத்தில் அதுபுறம் நிற்கும் தவிப்பு.., காத்திருத்தல் தரும் பல்வேறுவிதமான நல்ல, கெட்ட சிந்தனைகள், என்ன நடக்குமோ எனும் படபடப்பு.., இவைகளெல்லாம் நிகழ்வுகளாக அல்ல.., மாறாக பாடங்களாக.., இறைநியதியின் எழுதப்பட்ட ஆவணங்களாக மட்டுமே இருக்க முடியும். தேவையின் கட்டாயத்தை நாம் உணர்ந்து.., அதனை எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தோமேயானால், நிச்சயம் நினைத்ததை சாதித்திருக்க முடியும்..! குறைந்தபட்சம் அவசியப்படும் நேரத்திலாவது இதனை செய்ய முடியும்..!ஆனால் எம்மால் இயலுவதில்லையே..!இதுதான் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நடப்பது..!

இந்த கட்டங்கள் ஒவ்வொரு மனிதனையும் சோதிக்கக்கூடியவை..! அந்த சோதனைகளிலிருந்து மீள வழி காட்டுபவைதான் இறைநியதிகள்..! காத்திருத்தல் என்பது மட்டுமல்ல, அனைத்தும் இறைநாட்டம் எனும் திண்ணமான எண்ணம் எம்மில் பொதிந்துவிட்டால்தான் எது நடப்பினும் எம்மால் இறைவிருப்பத்திலிருந்து பிறழ்ந்து செல்லாமல் இருக்க முடியும்..!

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!

# ஓங்க வேண்டும் வனிதையரின் மேன்மை..!
# ஒழிய வேண்டும் அவர்மீதான வன்மை..!!

**நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத நெறிகள்... இப்படிப் பள்ளிப் பருவம் முதலே புதுமைப் பெண்ணாக தன்னைச் செதுக்கிக் கொண்டு வாழ வேண்டிய உயிர்கள் கருவிலோ அல்லது அறியாப் பருவத்திலோ புதைக்கப்பட்டுவிடுகின்ற அவலம்..!பாரம்பர்யசார் வழக்கங்களால், வரதட்சணை பெயரால் வஞ்சிக்கப்படும் கேவலம்..!!விபச்சாரத்தின் பெயரால் விற்பனைப் பண்டமாய் பந்தாடப்படும் பாவக்கரம்..!தொடர்கின்றன மகளிர் மீதான வன்கொடுமைச்சரம்..!இதனைத் தீர்க்க அழகிய மார்க்கம் பதிக்கின்றது உன்னத வழிமுறைத்தடம்!**

*நவீன நங்கையர் கல்வி கற்கின்றார்கள்.பணிக்குப் போய் கை நிறைய சம்பாதிக்கின்றார்கள். சமூகத்தில் உன்னத மதிப்புடன் திகழ்கின்றார்கள்.இந்த உண்மை எவ்வளவு வலுவானதோ அதனை விடப் பன்மடங்கு வலுவானதாகவும் வெட்கப்படக்கூடியதாகவும் இருக்கின்றது அவர்கள் மீதான வன்கொடுமைகளும் அநீதிகளும்.!*

*பல்துறைகளில் தனிப்பட்டதாகவும்,சமூக ரீதியாகவும் பலவகைகளில் இவை பிரயோகமாகின்றன. பெண்கள் மீதான வன்முறை அதிகரித்து இருக்கிறது, எத்தனை பெரிய பதவியில் இருந்தாலும் அவள் ஆணாதிக்கச் சூழல் வட்டத்தில் இருந்து விடுபட முடிவதில்லை, பெண்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பில்லை என்று குரல்கள் சாதாரணமாகிவிட்டன.*



*இவ்வகையில் வனிதையருக்கு எதிரான.., குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலான சில வன்கொடுமைகளையும், இழைக்கப்படும் அநீதிகளையும் அலசுவோம்.*

## பாலியல் வன்கொடுமை..!

*மகளிர் மீதான இந்தப் பிரதான வன்கொடுமை குடும்பத்துக்குள்,பணியிடங்களில் வெகுவாக பரவிவிட்டிருக்கின்றது.*

*குடும்பத்துக்குள் என்று சொல்வதாக இருப்பின், விவரம் தெரியாத சிறுமிகளிடத்தில் அவர்களுடனான உறவுமுறைகளை தவறாகப் பயன்படுத்தி பிஞ்சுகளை நாசப்படுத்துவது ஒருபுறம் என்றால்,*

*கூட்டுக் குடும்ப வாழ்வில் மாமனார்,நாத்தனார் போன்ற உறவுகளின் பேச்சு,செயல்ரீதியான பாலியல் வக்கிர கொடுமை மறுபுறம்.*

*இதனால் மானத்துக்கு பயந்து உயிர் மாய்ப்போரும் மவுனமாய் இந்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருப்போரும் பெருகி வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.*

### அலுவலக பாலியல் வன்கொடுமை

*எவருக்கும் எளிதில் கிடைத்துவிடாத ஒரு பணி தமிழ்செல்விக்கு! ஆனால்,அலுவலகம் செல்வதற்கோ வேண்டா வெறுப்பாய் தயாராவது அவருக்கு வாடிக்கையாகிவிட்டது.வேலை பிடிக்காததோ அல்லது சம்பளம் போதாமையோ அதற்குக் காரணம் அல்ல.*

*மாறாக, 50- வயதுகளில் இருக்கும் அவருடைய மேலதிகாரி செய்யும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு அளவே இல்லை.*

*உச்சகட்டமாக தமிழ்செல்வியின் நியாயமான பதவி உயர்வுக்கு,அவருடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் அநியாயமான நிபந்தனையை வைத்தபோதுதான் பொங்கி எழுந்தார் அவர். வழக்குரைஞர் ஒருவர் உதவியுடன் சட்டரீதியான நடவடிக்கைகளில் இறங்கினார்.*

### பணியிடங்களில் பாலியல் வன்முறை எப்படி ஆரம்பிக்கின்றது?

*சைகை ரீதியாக அருவருப்பாக சமிக்ஞைகள்,தகவல் தொடர்பு சாதனங்கள்*

*மூலம் செய்திகள்-படங்கள் அனுப்புவது,வேண்டுமென்றே அடிக்கடி வரவழைத்து தொல்லை தருவது .. இத்யாதி ரகங்கள்..!*

*இந்த வழிமுறைகள் பலன் தராவிட்டால் இறுதியாக தமிழ்ச் செல்விக்கு நிகழ்ந்ததுபோல் பணியைக் காரணம் காட்டி அடிபணிய வைக்க முயல்வது..!*

*ஆனால் எத்தனை பேர் தமிழ்ச்செல்விகளாக பொங்குவார்கள்..?*

*வெளியில் சொன்னால் வெட்கம் என்றோ அல்லது குடும்பநிலை காரணமாகவோ அமைதியாக இருந்துவிடுவர்கள்தான் அதிகம்..!*

## கடத்தல் மற்றும் பொருளாதாரப் பண்டங்களாய்..!

*இது வெளியில் அவ்வளாகத் தெரியாத பெருங்கொடுமை. குறிப்பாக மென்பொருள் துறையும்,அதுசார்ந்த நிறுவனங்களும் அசுர வேகத்தில் வளர்ந்துவிட்ட நேரத்தில், அங்கு பணியாற்றுவர்களுக்கு மனச்சுமை போக்க வேண்டியோ அல்லது கைநிறைய சம்பாதிப்பதால் பெண்துணையைப் பெற்றுக்கொள்ளவோ ஒரு பெரும் கட்டமைப்பே செயற்படுவதாக நாள்தோறும் செய்திகள் வெளியாகின்றன.*

*இதற்காக பெண்களைக் கடத்துவதும், அவர்களைப் பண்டப் பொருளாய் விற்பதும் நடக்கின்றது. பாலியல் தொழிலுக்காகப் பெண்களை கடத்துவது தொடர்பாக தமிழகத்தில் மட்டும் எழுநூறு வழக்குகள் வரை பதிவு*





சர்கோசிக்களின் சண்டித்தனத்தால் இஸ்லாமிய 'பர்தா'வுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்த போராடும் ஃபிரான்ஸ் முஸ்லிம் குடிமகள் கென்ஸா டிரைடர் இஸ்லாமிய சட்ட உரிமைகளுக்கு எதிரான எந்தவொரு ஆதுமான போராட்டத்திலும் அசராமல் பங்குபெற்று வருகின்றார்.வரும் ஃபிரான்ஸ் பொதுத் தேர்தலில் தானும் போட்டியிடப் போவதாக அதிரடியாக அறிவித்திருக்கிறார்..!

## பாரம்பர்ய பழக்கசார் வன்கொடுமை..!

பொதுவாக கட்டுப்பெட்டியான கிராமக் குடும்பங்களில்தான் இந்த நிலை என்று நினைத்தீர்கள் என்றால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.நகரங்களும், படித்த ஒருசில மேல்தட்டு வர்க்கத்தினரும் இதிலிருந்து விதிவிலக்கல்..!

இந்திய வடமாநிலங்களில் இருக்கும் விதவைகளுக்கெதிரான சமூகப் புறக்கணிப்பு,தேவதாசி எனும் கோவில்களுக்கு நேர்ந்துவிடும் பாரம்பர்ய வழக்கமுறை, உடன்கட்டை ஏறுதல் எனும் சதி ஆகியன இன்றும் செய்திகளாக வலம் வருகின்றன.



தென் மாநிலங்களைப் பொறுத்த வரை வரதட்சணை கொடுமை என்பது சமூகப் புற்றுநோயாக உருவெடுத்திருக்கின்றது. இந்த கொடுமை தமிழகத்தில் எல்லா மதத்தினரிடையேயும் தலை விரித்தாடுகிறது...!

இன்று சமூகத்தில் படித்தவர்கள் முதல் படிக்காத பாமரன் வரை சாதி மத பேதம் இல்லாமல் செய்யும் ஒரு சட்ட விரோத செயல் இது,எவ்வளவுதான் தவிர்க்க முற்பட்டாலும் இதன் கொடுமையை ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொருவரும் சந்திப்பது நடக்கின்றது.இந்திய மண்ணில் மட்டுமே இந்த கொடுமை தலைவிரித்தாடுகிறது.

வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியதால் இளம்பெண் கர்ப்பிணி ஒருவர் மரணம் தழுவிய துயர சம்பவம் புனே அருகிலுள்ள அம்பேகவ்ன் சிற்றூர் கிராமப்பகுதியில் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

பெண்ணை பெற்றவர்கள் தங்களுடைய பிள்ளைகளை மணகோலத்தில் அனுப்பி வைக்கிறார்கள்...ஆனால் கணவன் வீட்டாரோ அந்த பெண்ணை பிணக்காலத்தில் திருப்பி அனுப்பி வைக்கிறார்கள்.

## கேலிக் கிண்டல்கள்-அமில வீச்சுக்களும் பழிதீர் கொலைகளும்..!

1998-இல் சென்னை மாணவி சரிகாஷா மாணவர்களால் கேலி-கிண்டல் (Eve Teasing) செய்யப்பட்டு உயிரிழந்தபோது நாடே கொதித்தெழுந்தது.இந்த வன்கொடுமையின் உச்சகட்ட வடிவமாக இருப்பதுதான்,அமில வீச்சுக்களும், பழிதீர் கொலைகளும்!

செய்யப்பட்டிருப்பதாகவும், பதிவு செய்யப்படாத வழக்குகளோ இதனைவிட பத்துமடங்கு என்றும் க்ரைம் செய்திகள் தெரிவிக்கின்றன.

### எப்படி இந்த வன்கொடுமை சாத்தியமாகின்றது?

இந்த வழியில் அதிகக் கைங்கர்யம் மாஃபியா மற்றும் கூலிப்படைகள்தான்!மகளிரிடம் பெருகி வரும் சினிமா மோகம், ஃபேஷன் வேட்கை,குடும்ப சுமை ஆகியவற்றை தங்களின் இந்த வணிகத்துக்கு சாதகமாக்கிக் கொள்ளும் மாபாதகர்கள் உபயத்தால், 2010-ஆம் ஆண்டில் இந்தியாவில் மட்டும் 29,795 குழந்தைகள்,பெண்கள் கடத்தப்பட்டுள்ளதாக தேசியக் குற்றப் பதிவு ஆவணக் காப்பகம் அறிக்கை வாசிக்கின்றது.

**பெண்ணை பெற்றவர்கள் தங்களுடைய பிள்ளைகளை மணகோலத்தில் அனுப்பி வைக்கிறார்கள்! ஆனால் கணவன் வீட்டாரோ அந்தப் பெண்ணை பிணக்காலத்தில் திருப்பி அனுப்பி வைக்கிறார்கள்.**

**“என்ன பெண் குழந்தையா? எப்படி கட்டிக்கொடுக்க போற?” போன்ற சமுதயாத்தின் வார்த்தைகளுக்கு அஞ்சியே பல பெற்றோர்கள் இந்தப் பாவச் செயலுக்கு துணிகின்றனர்.**



தன் காதலை மறுத்துவிட்ட ஆத்திரம்,தன்னை மறுத்து,மாற்றானுக்கு சம்மதம் சொன்ன கோபம் என்று பல வடிவங்களில் இந்த கொடுமை பெண்களை குறிப்பாக மாணவியரை குறி வைக்கின்றது

உலகம் முழுவதும் தெரியும் அளவுக்கு ஒரு ஊரே இத்தகைய வன்கொடுமைக்கு சாமரம் வீசியதை என்ன சொல்ல..? இந்த பழைய முறைகளை தூக்கிச் சாப்பிடும் வகையில் நவீன வசதிகள் கருவின் பாலினத்தை அறிந்துகொள்ள



## பெண் சிசுக்கொலை..!

மேற்சொன்ன கொடுமைகள் அனைத்தும் புறநீதியில் நடப்பவை.ஆனால் உலகையேக் காணாத சிசுவாகவும் அல்லது உலகின் சுவாசத்தை முழுதுமாக அனுபவிக்காத அறியாப் பருவத்திலும் இருக்கும் மழலை, பால் ரீதியாகப் பெண் எனும் ஒரே காரணத்துக்காக உயிருடன் சமாதி கட்டப்படும் கொடுமை நெஞ்சை பதைபதைக்க வைக்கின்றது.

"என்ன பெண் குழந்தையா?எப்படி கட்டிக்கொடுக்க போற ? போன்ற சமுதாயத்தின் வார்த்தைகளுக்கு அஞ்சியே பல பெற்றோர்கள் இந்த பாவச்செயலுக்கு துணிகின்றனர்.

மேலும் நமது சமுதாய நம்பிக்கையின்படி வரதட்சணைப் பழக்கத்தால் மகளென்றால் செலவு என்றும்,மகனென்றால் வரவு என்றும் நினைக்கின்றனர். இதுபோன்று ஒவ்வொரு விதமான மூடநம்பிக்கைகள் இருக்கத்தான் செய்கின்றன.

உசிலம்பட்டி என்றாலே கள்ளிப்பால் கொடுத்து கல்லறை கட்டும் ஊர் என்று மிக்க வசதியாகவிட்டன.

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 80 இலட்சம் கருக்கள் வரை கலைக்கப்பட்டிருக்கலாம் என்று மகளிர் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

### எப்படி சமாதி கட்டுகின்றார்கள்?

நெல்லரிசி,ஈரத்துணியால் அமுக்குவது,கள்ளிப்பால் என்று கிராம வழிமுறை என்றால் ஹைடெக் மருத்துவத்தின் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்கள் மூலம் சப்தம் இன்றி காரியம் சாதித்துக் கொள்கின்றன, ஒரு சில நகரத்து மனித மிருகங்கள்!

## தற்கொலைகள்..!

பெண்ணே தன்னை வன்கொடுமைப்படுத்திக் கொள்ளும் அவலமாக இதனைக் காணலாம். சமீபகாலங்களாக இது மிகவும் அதிகரித்து வருகின்றது.

அழகிய வண்ணமய வாழ்விலிருந்து விடுபட்டு இருட்டறைக்குள் பதுங்கும் வழிகளைத் தேடிக்கொள்ளும் இவர்கள், ஒரு துண்டுக் கயிற்றிலோ,ஒரு துளி விஷத்திலோ தங்களின் வாழ்வை முடித்துக் கொள்கின்றார்கள்.

சரி மகளிருக்கெதிரான வன்கொடுமை குறித்த பிரச்னைகளை இனி ஆய்வோமா..?


இறைநாடின் அடுத்த இதழில்

இஸ்லாமிய கல்வி,நாகரிக மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எகிப்து இன்றைய நவீன உலகில் சிந்தனைக்களப் பெண் புலியை தந்திருக்கின்றது.சமூக வலைதளங்களைப் புரட்சிக்கும் பயன்படுத்தலாம் ‘என்று திசைகாட்டி, எகிப்து நாட்டில் புரட்சியை வெடிக்க வைத்திருக்கிறார் அஸ்மா மஹ்ஃபூஸ்! ‘ஏப்ரல் 6 இளைஞர் இயக்கம்’என்று ஃபேஸ்புக்கில் கணக்கு ஆரம்பித்தவர், ‘அரசியல் உரிமைகள் கிடைக்காவிட்டாலும், வாழும் தகுதியான மனித உரிமையாவது கிடைக்க வேண்டும்’என்று கலகக்குரல் எழுப்பினார்.



# மனத்தில் மட்டுமா கறை..?
# உடையிலும் உள்ளது குறை..!!

**ஆடை மனித கற்புக்கு புறப்பாதுகாப்பு அம்சம்.,!அதனை கண்ணியப்படுத்துவது மனிதருக்கு அவசியம்..!!மனத்துக்கு என்றும் தேவை கட்டுப்பாட்டு கடிவாளம்..!அதனை முன்னெடுத்துச் செல்ல கண்ணிய ஆடை அத்தியாவசியம்..!!**



ஆடை என்பது பல்வேறுவிதமான வியாக்கியானங்களைக் கொண்டுள்ள பிரதான தேவை! அது நாகரிகத்தின் வளர்ச்சிக்கான, மனிதப் பண்பாட்டை விளக்கும் அத்தியாவசிய குறியீடு! ஆனால்,'அந்த ஆடையே ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கும், பலாத்காரத்துக்கும் ஆளாக்கிட காரணம்' என்கிற கருத்து, படித்தவர்கள், படிக்காதவர்கள் என அனைத்துத் தரப்பு மக்களிடமும் இருக்கிறது. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் புரையோடிப் போயிருக்கும் இந்த எண்ணத்துக்கும் எதார்த்த நிலைக்கும் உள்ள தொடர்பை காணின் குறை மனத்திலா.. ஆடையிலா என்பது விளங்கும்.

இன்று ஆபாசத்துக்கும் மகளிர் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கும் பிரதானமாகக் கொள்ளப்படும் திரைப்படத் துறையையே எடுத்துக்கொள்ளுங்கள். 1940-களில் வந்த படங்களைப் பார்த்தால்... தமிழ்நாட்டுப் பெண்கள்கூட தலையில் முக்காடு போட்டு இருப்பார்கள். அதற்காக அன்று பெண்கள் மேல் வன்முறை நிகழவே இல்லை என்று சொல்லிவிட முடியாது.

எண்ணம்தான் பாலியல் பலாத்காரத்துக்கும், வன்முறைக்கும் தூண்டுதல் என்பது சரிதான்..!ஆனால் அந்தத் தூண்டுதலுக்கு தூண்டில் போடுவது எது..?

தனிமனித ஒழுக்கம் சரியாக அமைந்துவிட்டால்.., எந்நிலையிலும் ஒருவன் தரம் தாழமாட்டான்.ஆனால், ஒழுக்கமாயிருப்பினும் அவனது இயல்பான உணர்வுகளை, கட்டுக்கு மீறிய ஒரு மிருக எண்ணத்தைக் கொண்டு வருவது எது என்பதை சிந்திக்க வேண்டும்.

"ஆள் பாதி ஆடை பாதி என்பது உண்மை. உடலின் பெரும்பகுதி தெரியும்படி ஒரு பெண் வரும்போது, அவளுடைய அந்த நடத்தையைக் காரணப்படுத்தி யாருமே துர்ச்சிந்தனையைக் கொணருவதில்லை.காரணம், ஆண்களுக்குள்ளும் ஒழுக்கம், சுயகட்டுப்பாடு உண்டு.ஆனால்,நிலைமை கட்டுக்கடங்காது போவது இயற்கையாக ஆணுள் இருக்கும் உணர்வுகளாலும், அந்த பெண்ணின் ஆடையினாலும்தானே..!

"ஒரு பெண் தன் உடல் பாகங்கள் தெரியும்படி உடை உடுத்தி வரும்போது, ஒரு ஆண் கிளர்ச்சி அடைவான்",ஆணின் 'லிம்பிக் சிஸ்டம்' அவனுடைய உணர்ச்சியைத் தூண்டும் என்பது மனநல மருத்துவத்தின் கூற்று!இயற்கையான விஷயம்..., ஹார்மோன்களின் கைங்கர்யம்.

மனதுக்கு ஆடை என்பது அதிமுக்கியம். ஆனால், அது தனிமனித ஒழுக்கம்.உடலுக்கு இச்சை தூண்டா கண்ணிய ஆடை வேண்டும். இது சமூகம் சார்ந்த ஒழுக்கம்.

எவ்வளவு நாகரீகம் என்று கூறி கொண்டாலும், மகளிருக்கு உடை ஒரு கண்ணியத்தையும்,மரியாதையையும் கொடுக்க வேண்டும்,அதுதான் ஒரு பெண்ணுக்கு அழகு,கம்பீரம்,பெண்மை எல்லாமே..!தனிமனித பாதுகாப்பு என்பது முதலில் அவனி(ளி)டமிருந்தே தொடங்குகிறது.அதற்கான ஏற்பாட்டில், அவர்கள் அணியும் உடையும் ஒரு பகுதி!

இயற்கையாக எடுத்துக் கொண்டாலும்,மனித உடலமைப்பில் ஆணை விட பெண் அதிகமான அளவு உடை அணிய வேண்டும் என்பது யதார்த்தம். ஆனால் ஆண்கள் முழு கால் சட்டையும் முழுக்கை சட்டையும் அணியும் பொழுது பெண்கள் நாகரீகம் என்ற பெயரில் ஆடையில் மிச்சம் பிடிப்பது ஏன்?

பல திரைப்படங்களில்..,விளம்பரங்களில்.., பெண்களைப் பயன்படுத்திக் கொள்ளும்விதம் மற்றும் ஃபேஷன் ஷோக்களை பார்க்கும்போது பெண்கள், நாகரீகம் என்ற போர்வையில் கோமாளிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அப்பட்டமாக புரிந்தாலும் அதனை எப்படி புரியவைப்பது என்பதுதான் சமூகத்தின் முன் உள்ள பெரிய குழப்பம்.

உண்மையில், ஆடைகளில் அலட்சியமாக இருக்கும் பெண்கள்

கட்டுப்பாடுகளை விரும்பாதவர்களாகவும் கண்ணியமாக உடுத்தும் பெண்கள் சுயகட்டுப்பாடு உடையவர்களாகவும் தெரிகிறார்கள். ஆடையும் நடத்தையும் அது ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி கண்ணியம் காக்கும்படி இருக்கவேண்டும் அதுதான் நாகரீகம்.

ஆண்களின் மனவக்கிரத்துக்கு தண்டனை இருக்கின்றது.வக்கிரத்தைத் தூண்டும் ஆடைகளை அணியும் பெண்களுக்கு...?

ஆடைக் குறைப்புக்கும் காமப்பார்வைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வர்களைக் கண்டால் ஆச்சரியாமாயிருக்கிறது.

காம உணர்வைத் தூண்டுவது கவர்ச்சியான அங்கங்கள் என்பது பெண்களுக்கே தெரிந்த விஷயம்தான்!ஆனால் அவர்கள்தான் அதில் அங்கலாய்க்கின்றார்கள்.

ஒரு பெண் உடல் அங்கங்கள் மறையும்படி (தாமாகவே வெளித் தெரியும் அங்கங்கள் தவிர) உடை உடுத்தினால், அப்பெண்ணின் தனித்தன்மையை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள் என்று பொருள். அதே சமயம், அங்கங்களை பிரகடனப் படுத்தி உடை உடுத்தி தன்னை வெளிப்படுத்து வாளேயானால், அதற்குரிய முக்கியத்துவம்தானே கிடைக்கும். ..!




சமூகம் எப்படி வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் இயற்கை என்று ஒன்று இருக்கிறது.

உதாரணத்துக்கு உங்கள் ஊரில் நகை பறிப்பு சம்பவங்கள் அதிகரித்துவிடுகின்றது. இது குறித்து காவல்துறை "திருடர்கள் எங்கும் எப்போதும் வராலாம்... எனவே நீங்களும் உங்கள் பங்குக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்... கூடுமானவரை அதிகமாக நகை அணிந்துதனியே செல்லாதீர்கள்" என்கின்றார்கள். "தவறு நகை அணியும் பெண்களிடம் இல்லை, திருடர்களிடமும், அவர்களை திருடர்களாக்கிய திருட்டு சமூகத்திடமும்தான் இருக்கிறது.

கட்டுப்பெட்டி இஸ்லாமிய அரசாங்கம் என்று அவதூறு வீசப்படும் ஸவூதி அரேபியாவில் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு உட்பட்டு விமானிப் பட்டயத்தைப் பெற்றிருக்கின்றார் கேப்டன் ஹனாதி ஜக்கரிய்யா ஹிந்தி! ஹாக்கர் 800 பிசினஸ் ஜெட் எனும் ஆண்கள் மட்டுமே கோலோச்சி வந்த இந்த விமானிச் சான்றிதழுக்கு சகோதரி ஹிந்தியும் இப்போது சொந்தக்காரர்!



எனவே அவர்களை திருந்த சொல்லுங்கள்... நாங்கள் நிறைய நகை அணிந்து தனியாகத்தான் செல்வோம்" என்று நீங்கள் கூறினால்,நஷ்டம் யாருக்கு..? உங்களுக்குத்தானே..!

இப்போது பாருங்கள்..!இஸ்லாமிய முறைப்படி உடை உடுத்தும் பெண்களை ஆண்கள் கண்ணியமாகப் பார்ப்பதை நம் நாட்டிலேயே கண்கூடாகக் காணலாம்!அதனால்தான் இஸ்லாமிய ஆடையை எவரும் கண்ணியக் குறைவாகக் கூறுவதில்லை..!மாறாக தடைதான் ஏற்படுத்துகின்றார்கள்..!

திருக் குர்ஆன் மனதுக்கும், உடலுக்கும் ஆடையாக தன் வசனங்களை முன்வைக்கின்றது:

(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும். இதுவே, அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும். அவர்கள் செய்யும் அனைத்தையும் திண்ணமாக, அல்லாஹ் நன்கு தெரிந்தவனாக இருக்கின்றான். மேலும் (நபியே!) இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக்கட்டும். தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும் அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முன்றானையைப் போட்டுக் கொள்ளட்டும். 4:31,32

பெண்களுக்கு ஆதரவளிக்க வேண்டியதுதான், அதற்காக பெண்களே வெறுக்கும்படி உடை உடுத்துவது சரியா என்ன..?

எனவே மனதுக்கு ஆடை அவசியம்..!அந்த அவசியத்தை அழகாக்க கண்ணிய ஆடை அத்தியாவசியம்..!அந்த ஆடைமுறைக்கு கட்டியம் கூறுவது இஸ்லாமிய மார்க்கம்.!



பாகிஸ்தான் திரைப்பட நடிகை ஸாரா சவுத்ரி, திரைப்படத் துறையை விட்டு, இஸ்லாமிய நெறியின்பால் மீண்டிருக்கின்றார்.இறைவனுடைய அருளை மறந்து இதுநாள்வரை இஸ்லாமிய வாழ்க்கை முறையை விடுத்து மனம் போன போக்கில் வாழ்ந்திருந்த தனக்கு புதிய வாழ்க்கையை வழங்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் என்று போற்றும் இவர், அழைப்புப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபடப் போடுவதாகக் கூறியிருக்கின்றார்.

# குவைத் இருபெரும் விழா..!










இஸ்லாமிய நிலையம் - IPC,அனைத்து கிளைகள் இணைந்து குவைத் தேசிய மற்றும் விடுதலை தின விழாவை விமரிசையாக கொண்டாடின.கப்த் கிளையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்,தெலுகு,இந்தி,மலையாளம், நேபாளம் மொழிகளைச் சார்ந்த புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய சகோதரர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இஸ்லாமிய நிலையம் - IPC,தலைமையகக் கிளை அழைப்புப்பணிப் பிரிவுத் தலைவர் அஷ்ஷெய்க் முஸ்அத்-அல்-எனஸி அவர்கள் சிறப்புரையாற்றினார்.









நேபாளத்தின் புகழ்பெற்ற நடிகையும்,பாடகியுமான புத்த குடும்பத்தில் பிறந்த'பூஜா லாமா' சில மாதங்களுக்கு முன்பு இஸ்லாத்தை தழுவி,தனது பெயரை' ஆம்னா ஃபாரூகி' என்று மாற்றிக் கொண்டார்.மேலும்,இஸ்லாத்தை ஏற்ற பின் நடிக்கும் தொழிலையும்குடி,புகை போன்ற தீய பழக்கங்களை விட்டுவிட்டார்.ஆனால் இவர் ஆபாசமாக நடித்த படங்களைக்காட்டி இந்த பெண்ணின் மனதை நோகடித்துக் கொண்டிருக்கும் அவலமும் ஒரு புறம் நடந்துக் கொண்டுதான் இருக்கிறது.










# NAF 7-ஆம் ஆண்டு விழா.,!

வலைதள மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கழகம்- NAF -Net Achivers Forum அமைப்பின் ஏழாவது ஆண்டு விழா ரவ்தா,ஜாமிஅத்து இஸ்லாஹ் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.குவைத்தில் செயற்படும் பல்வேறு இந்திய அமைப்புக்கள் அறிமுகம் மற்றும் பாலர் பள்ளி விழா ஆகியன நடைபெற்ற இவ்விழாவில் இஸ்லாமிய நிலைய மேற்கத்தியப் பிரிவு –AWARE மையத்தின் ஹஸன் தாஹா அவர்கள் 'இருமை வாழ்வின் உயர்வுக்கு உன்னத கல்வி" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.இஸ்லாமிய நிலைய, 'வசந்தம்' தமிழ் இதழ் ஆசிரியர் மு.அ.அப்துல் முஸ்வ்விர் கலந்துகொண்டு, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய இந்திய வல்லுநர்களுக்கு NAF சாதனையாளர் -Career Excellence விருதுகளை வழங்கினார்.பல்வேறு துறைகள் சார்ந்தோரை ஒரு குடையின் கீழ் இணைக்கும் NAF பல்வேறு சமூகப்பணிகளையும் நாட்டிலும் குவைத்திலும் ஆற்றி வருவதாகத் தெரிவிக்கின்றார், அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தமிழகத்தைச் சேர்ந்த பொறியாளர் முஹம்மத் இப்ராஹீம்..! வல்ல இறைவன் NAF பணிகள் தொடர அருள் பாலிக்கட்டும்!



# மனங்களை மணக்கச் செய்யுங்கள்..! மறுமணத்தை ஊக்குவியுங்கள்..!




**வாழ்க்கைத்துணை என்பது இறைவன் தந்த வரம்.!அது சிறக்கச் செய்வது இல்லறம்.!அது இழக்கப்பட்டால் மீண்டும் தேடிக் கொள்வதும்., தேடிக்கொள்ளச் செய்வதும் இறைவனின் நியதித்ததரம்.!சமூகம் அதற்கு போடக்கூடாது தடைகளின் சரம்.!அதற்கு துணை நிற்பதே உன்னத அறம்.!**

ஆணோ பெண்ணோ, அவர்களின் திருமண வயதை அடைந்துவிட்டால் பெற்றோர்கள் அவசரப்படுத்தி கஷ்டத்தின்மேல் கஷ்டம் அனுபவித்தாவது திருமணத்தை நடத்தத் துடிக்கின்றனர். ஆனால் இந்த இல்லற இன்பத்தை சிலகாலம் சுவைத்துவிட்டுக் கணவனை இழந்து கைம்பெண்ணாக நின்றால் அவர்களுக்கென மற்றொரு துணைவனைத் தேடி இழந்த வாழ்வை மீட்டுக் கொடுக்க எவரும் முயற்சிப்பதில்லை. இதுமட்டுமல்லாமல், ஊரிலோ, குடும்பத்திலோ, ஏன் அவர்கள் பெற்ற குழந்தைகளுக்கோ ஒரு நல்ல காரியத்திற்காகச் செல்லும்போது அந்த அப்பாவி விதவைகள் எதிர்பட்டால் அந்த காரியம் நிறைவேறாது என்று அந்தப் பெண்ணை ஏசியவர்களாகவே மீண்டும் வீடு திரும்பிவிடுவர். இதுபோன்று விதவைகளை வேதனைப்படுத்தும் ஏராளமான விஷயங்கள் பெரும்பாலும் நமது நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

கணவனை இழந்து மறுமணம் செய்ய முடியாமல் இல்லறத்திற்காக ஏங்கி நிற்கும் மனவேதனை ஒருபுறம், சமூகத்தவர்களால் அவளுக்கு ஏற்படும் அவமானம் மற்றொரு புறம். இதனால் சிலர் வாழ்நாள் முழுவதும் தான் வாழத்தான் வேண்டுமா? என தன்னைத்தானே நொந்து கொள்ளும் நிலை.



இன்னும் சிலரோ 'இருப்பதைவிட இறப்பதே மேல்' என தானாகவே அழிவைத் தேடிக் கொள்கிறார்கள். மற்றும் சிலரோ மறுமணம் செய்ய முடியாததால் இல்லறத்தை நோக்கி அலைபாயும் எண்ணங்களைத் தணித்துக்கொள்ள தவறான வழியில் வாழ்வைத்தேடி புதைகுழியில் விழுகின்றனர்.



வாழாவெட்டி எனும் பெயர், உடன்கட்டை என்ற பெயரால், கணவனுடன் சேர்ந்து அவளையும் சாகடிக்கும் கொடுமை என்று பெண்களின் வாழ்வுரிமையை திட்டமிட்டல்லவா பறிக்கிறது இக்கொடிய சமூக வழக்கங்கள்!

கணவனை இழந்ததை தன் வாழ்வில் ஏற்பட்ட பெரிய இழப்பாகக் கருதி மற்றொரு திருமணத்தையும் முடித்துக் கொண்டு சமூகக் கொடுமைகளுக்கு எதிராக நீச்சல் போட்டு வாழ்வில் வெற்றி பெறுவது ஒரு பெண்ணுக்கு கவுரவமா? அல்லது கொடுமைக்கார மனிதர்களுக்கு அஞ்சி கோழைத்தனமாக உயிரைக் கொடுப்பது கவுரவமா?

இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய கொடுமைகளுக்குச் சாவுமணி அடித்தது. இதுபற்றியும்,கணவனை இழந்த கைம்பெண் நிலை குறித்தும்,விவாகவிலக்கு பெற்ற பெண் நிலை பற்றியும் அல்லாஹ் திருமறையில், (முறையே திருக்குர்ஆன் வசனங்கள் 24:32,2:234 மற்றும் 2:23 பார்க்க) விளக்குகின்றான்!

**விதவைப் பெண்களை இழிவுபடுத்துபவர்களைச் சட்டம் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும்.**

இவ்வசனங்களுக்கு விளக்கமளிக்க வந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களின் வாழ்வுரிமையை நிலைபெறச்செய்ய அவர்களுக்கு மறுமண வாழ்வளித்து முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். இதனை வழிகாட்டியாக ஏற்ற உத்தம நபித்தோழர்களும் இப்புரட்சியைச் செய்துள்ளார்கள்.

இனிமேலும்,பெண்கள் தூங்கிக் கொண்டிருக்கக்கூடாது. பெண்ணினத்தைக் கொடுமைப்படுத்தும் ஆணினத்தைப் போன்று பெண்ணும் ஒரு தாய்க்கும் தந்தைக்கும் பிறந்தவள்தான். ஆண்களைப் போன்ற உணர்வுகளும், வாழும் ஆசைகளும் அவளுக்கும் உண்டு என உணர்த்த வேண்டும்.

விதவைப் பெண்களை இழிவுபடுத்துபவர்களைச் சட்டம் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும். அவர்கள் மறுமணம் செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்திட உரிமை கொடுக்க வேண்டும். மேலும் உலகிலுள்ள அனைவரும் பெண்களின் உரிமைகளைப் பேணும் விஷயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.



மணிப்பூர் மாநிலத்தில் அமலில் இருக்கிறது 'ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்'. இதன்படி இந்திய ராணுவம் யாரை வேண்டுமானாலும் சுட்டுக் கொல்லலாம்,தாக்கலாம், தண்டனைக்கு உள்ளாக்கலாம்.இதனை எதிர்த்து,அயராமல் போராடி வருகிறார் 40 வயது இரோம் ஷர்மிளா. தொடர்ந்து 11 ஆண்டுகளாக பட்டினி என்பதால், உடல் உறுப்புகள் பலவும் செயலிழந்து, எப்போது வேண்டுமானாலும் மரணிக்கலாம் என்கிற கொடுஞ்சூழல். என்றாலும் போராட்டத்தைத் தொடர்கிறார்... நீங்கள் அவரை வாசித்துக்கொண்டிருக்கும் இந்த நொடி வரை!



# ஆண் - பெண் நட்பு ஒழுக்கத்துக்கு கேடு!

**ஆண்-பெண் என்பது இறைவனின் உயரிய படைப்பு!அவர்தம் பரஸ்பர ஆளுமைக்கு அளவுகோலே கற்பு..!கற்பைக் கேள்விக்குறி ஆக்கும் ஊடகமாய் நிற்பது அவரிடை போலி நட்பு..!**

ஆணின் நெருக்கமான நட்பு ஒரு பெண்ணுக்கு இன்றியமையாத தேவை இல்லை. ஆணின் நட்பு இருந்தால்தான் அவளது பிறவி சாபல்யம் அடையுமா என்ன? பெண்ணையும் ஆணையும் பால் வேற்றுமையால் பிரித்து வைப்பதும், அவர்களை நெருங்கிப் பழகவிடாமல் தடுப்பதும்தான் ஆண்களின் கவர்ச்சிக்கும், அதன் விளைவான தவறான நடத்தைக்கும் அடிகோலுகிறது என்பது பச்சைப் பொய்..! அபத்தத்திலும் அபத்தமான கருத்து..!!

பெண்களோடு அவர்களைப் பழகவிட்டாலும், பழகவிடாவிட்டாலும், அவர்கள் காட்டுகிற இயல்பு ஒன்றுதான். அதை மாற்றுவது மிக, மிக மிகக் கடினம். எனவே, பெண்கள் கவனமாக இருத்தல் வேண்டும் என்பது அவளது பத்திரமும், நலனும் சார்ந்த கோட்பாடாகும்.

கிழவனோ, குமரனோ, மணமானவனோ, பள்ளி கல்லூரி மாணவனோ, சிறுவனோ, இவ்வனைவரிலும் பெரும்பாலோர் பெண்ணை உடலுறவு சார்ந்த துய்பொருளாகத்தான் பார்க்கிறார்கள்.


எனவே, விஷப்பரீட்சை செய்து கொண்டிராமல், நம்பிக்கைக்கு உரியவன் என்பதே தனது கணிப்பானாலும், ஒரு நண்பனைக் குறிப்பிட்ட தொலைவில் வைத்து ஓர் எல்லை வகுப்பதே அறிவுடைமையாகும். நட்பின் தொடக்கத்திலேயே அதை அவனுக்குப் புரிய வைப்பவள் இன்னும் அதிக அறிவாளியாவாள்.

நமது கல்வித் திட்டம் குறைபாடு உடையது. பெண்களைச் சகோதரிகளாகவும், சக உயிர்களாகவும் கருதும் பக்குவத்தையும், அவர்களைக் காக்கும் ஜடாயுத்தனத்தையும் சிறு வயது முதலே ஆண்களுக்குக் கற்பிக்கத் தவறியுள்ள கல்வித் திட்டம் நம்முடையது.

ஆண்களும் பெண்களும் கலந்து பழகினால் குற்றங்கள் குறையும் என்று சில மனத்தத்துவ வல்லுநர்கள் கூறுவது வெறும் பிதற்றல். இதனால் எல்லாம் ஆணின் பிறவி இயல்பை மாற்றிவிட முடியாது. நற்சிந்தனையும், உயரிய எண்ணங்களும், பெண்களை நுகர்பொருளாய்ப் பார்க்காமல் சகமனிதர்களாய்ப் பார்க்கும் நியாய உணர்வும்கொண்ட சிலருக்கு இந்த உண்மை கசக்கும்தான்.

எனவேதான் நல்லிதயம் படைத்த ஆண்கள் சிலர் தங்களைப் போன்றே மற்றவர்களையும் எடை போட்டு ஆண்-பெண் நட்புக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். அவ்வாறு இல்லாத பிற ஆண்களும்கூட இதை ஆதரிக்கிறார்கள் - ஆனால், வேறு உள்நோக்கத்துடன். அவர்கள் காட்டில் மழை பெய்யுமன்றோ, அதற்காக..!

ஆண்களும் பெண்களும் கலந்து பழகினால் குற்றங்கள் குறையும் என்று சில மனத்தத்துவ வல்லுநர்கள் கூறுவது வெறும் பிதற்றல்.



# திரும்பி வந்துவிட்டு..,

சத்தமில்லாமல்
சமையலறை நுழைந்து
முத்தம் கொடுத்துவிட்டு
ஓடுகிறாய்!

என் பசி மறந்து உனக்காக
காத்திருக்கும்பொழுது
காத்திருக்கவேண்டாமென
கண்டித்து விட்டு..,
ஒரு கையால் இரு
இதழுக்கு ஊட்டுகிறாய்!

சான்றிதழுக்காக லஞ்சம்
கொடுத்துவிட்டு
கெஞ்சுபவனைப்போல...
மல்லிகைப்பூ
தந்துவிட்டு
மன்றாடுகிறாய்!

பள்ளிக்கு செல்லமறுத்து
தூங்குவதாய் நடிக்கும்
சின்னப்பையனைபோல...
மடியில் படுத்துக்கொண்டு
எழ மறுக்கிறாய்!

அம்மா வருவதாக பாசாங்கு
செய்யும்பொழுது...
பதறி எழுந்து நிலை
உணர்ந்து சிரிக்கிறாய் !

கை இழுத்து வைத்து
குளிக்க வைக்க
முயலும்போது
குளிரடிப்பதாய் கூறி -
ஒரு குழந்தையை போல
அழுகிறாய் !

மறைந்திருந்து
கட்டிப்பிடிப்பாய்...!
கையிலிருப்பதை
தட்டிப்பறிப்பாய்

கெஞ்சுவதும்...
மிஞ்சுவதும்...,
அழுவதும்...
அணைப்பதும்...,
கண்டிப்பதும்...
கண்ணடிப்பதும்...,
இடைகிள்ளி... நகை
சொல்லி...,
அந்நேரம் சொல்வாயடா
'அடி கள்ளி '..!

இவையெல்லாம் இரண்டே
மாதம் தந்துவிட்டு...
எனை தீ தள்ளி வாழ்வள்ளி
சென்றுவிட்டாய்...!
என் வளைகுடா கணவா!

கணவா...! எல்லாமே
கனவா....???

கணவனோடு இரண்டு
மாதம்..!
கனவுகளோடு இருபத்தி
இரண்டு மாதமா...?

12 வருடமொருமுறை
குறிஞ்சிப்பூ ...!
5 வருடமொருமுறை
ஒலிம்பிக்....!
4 வருடமொருமுறை
உலககோப்பை
கிரிக்கெட்... ...!
வருடமொருமுறை
கணவன் ...!
நீளும் பட்டியலோடு நீயும்
இணைந்துகொண்டாய்!
இது வரமா..? சாபமா..?

கண்களின் அழுகையை...
கண்ணாடி தடுக்குமா
கணவா?

திரும்பி வந்துவிடு என்
வளைகுடா கணவா... !
வாழ்வின் அர்த்தம்
புரிந்துவாழலாம்
விட்டுகொடுத்து... தொட்டு
பிடித்து...,
தேவை அறிந்து...
சேவை புரிந்து...,
உனக்காய் நான்
விழித்து... எனக்காக நீ
உழைத்து...,
தாமதத்தில் வரும்
தவிப்பு... தூங்குவதாய்
உன் நடிப்பு...!

வார விடுமுறையில்
பிரியாணி...!
காசில்லா நேரத்தில்
பட்டினி...!

இப்படி... காமம் மட்டுமன்றி
எல்லா உணர்ச்சிகளையும்
நாம்
பரிமாறிக்
கொள்ளவேண்டும்

இரண்டு மாதம் மட்டும்
ஆடம்பரம்.., உல்லாச
பயணம்..!
பாசாங்கு வாழ்க்கை
புளித்துவிட்டது கணவா!

தவணைமுறையில்
வாழ்வதற்கு
வாழ்க்கை என்ன
வட்டிக்கடையா?
எப்பொழுதாவது வருவதற்கு
நீ என்ன
பாலை மழையா ?
இல்லை.,
ஓட்டுவாங்கிய
அரசியல்வாதியா ?

விரைவுத்தபாலில்
காசோலை வரும்..!
காதல் வருமா ?
பணத்தை தரும்... பாரத
வங்கி ! பாசம் தருமா?

# என் (வளைகுடா) துணைவா..!

நீ இழுத்து செல்கின்ற
பெட்டியோடு
ஒட்டியிருக்கிறது என் இதயம்..!
அனுமதிக்கப்பட்ட எடையோடு
அதிகமாகிவிட்டதால் விமான
நிலையத்திலேயே
விட்டுவிட்டாயோ என்
இதயத்தை?

பித்தளையை எனக்கு
பரிசளித்துவிட்டு...
நீ தங்கம் தேடி வளைகுடா
சென்றாயே?
பாலையில் நீ.., வறண்டது
என் வாழ்வு!

வாழ்க்கை பட்டமரமாய்
போன...,
பரிதாபம் புரியாமல்
ஈச்சமரம் பக்கம்
நின்று எடுத்த புகைப்படம்
அனுப்புகிறாய்!

உன் வளைகுடா தேடுதலில்....
தொலைந்து போனது - என்
வாழ்க்கையல்லவா..?

விழித்துவிடு கணவா!
விழித்து விடு -
அந்த கடவுச்சீட்டு வேண்டாம்...
கிழித்துவிடு!

விசாரித்து விட்டு போகாதே..!
கணவா விசா.. ரத்து
செய்துவிட்டு வா!

திரும்பி வந்துவிடு என்
வளைகுடா கணவா... !
வாழ்வின் அர்த்தம் புரிந்து
வாழலாம்

-எனது விழியில்
கண்ணீருடன்....,
(உங்கள் அன்பு மனைவி)

*(பெண்ணின் உணர்வுகளை சொல்லியிருக்கும் இந்த கடித வடிவிலான கவிதையை மின்னஞ்சலில் அனுப்பி பகிர்ந்துகொள்ள சொன்ன தமிழக சகோதரிக்கும் அனுப்பித் தந்த அவர்தம் தோழிக்கும் மனமார்ந்த நன்றி!)*



## யூஸூ.:.பும் சகோதரர்களும்.! - 2

எல்மா ரூத் ஹார்டர்

தமிழில்
மழலைப்ரியன்



# யூஸூ.:.பின் கனவு!

ஒரு நாள் இரவு, யூஸூ ஃப் விந்தையான கனவு கண்டார். பதினோரு நட்சத்திரங்களும் நிலவும்,சூரியனும் அவருக்கு எதிரில் பணிந்து வணங்குவதாக கனவு கண்டார்.

யூஸூ ஃப் இந்தக் கனவைப் பற்றியே நினைத்து வியந்து கொண்டிருந்தார். தாம் கண்ட கனவை தந்தையிடமும் கூறினார். இறைவன் சிறந்த வழியில் யூஸூ ஃபை செலுத்தப் போவதை,யஃகூப் நபி புரிந்துகொண்டார். அவர் யூஸூ ஃபிடம், இந்தக் கனவைப் பற்றி உன் சகோதரர்களிடம் கூறாதே..!இது அவர்களுக்குப் புரியாது" என்றார்.

அவர்கள் யூஸூ ஃபைப் புண்படுத்தக்கூடுமென பயந்தார். யூஸூ ஃபிற்காக அல்லாஹ் ஒரு சிறந்த திட்டம் வைத்திருப்பதை யஃகூப் நபி புரிந்து கொண்டார்.

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

# திருக் குர்ஆன்

அத்தியாயம் 112
அல்-லஹப்
இஸ்லாத்தின் எதிரி அபூ-லஹப் என்பவனை சபித்து இறங்கிய அத்தியாயம் இது..!
இதன் இன்னொரு பெயர்
அல்-மஸத்
மக்காவில் அருளப்பட்டது
வசனங்கள்:5

| |
|---|
| بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ١ |
| تَبَّتْ يَدَآ اَبِيْ لَهَبٍ وَّتَبَّ ١ |
| 112:1 த(b)ப்பதிய்யத அ(b)பி லஹ(b) பி(ன்)வ் வத(b)ப் |
| 111:1 அபூலஹபின் கைகள் முறிந்துவிட்டன. மேலும், அவன் நாசமாகி விட்டான். |
| مَآ اَغْنٰى عَنْهُ مَالُهٗ وَمَا كَسَبَ ٢ |
| 112:2 மாஅ(gh)க்னா அன்ஹூ மாலுஹூ வமா கஸ(b)ப் |
| 111:2 அவனுடைய செல்வமும் அவன் சம்பாதித்தவையும் அவனுக்கு எந்தப் பலனையும் அளிக்கவில்லை. |

இம்மாத வசந்த மழலையர்..!




அஹ்மத் ஜூபைர்-சுமய்யா-ஸ.:.பிய்யா
பெற்றோர்
திரு மற்றும் திருமதி
முஹம்மத் இப்ராஹீம்
மதுரை - தமிழ்நாடு
ஸால்மியா-குவைத்



# துணையின் புரிதல்..,
# வளர்க்கும் காதல்..!

**பாலைவனத்தில் தோன்றிய ஓர் அழகு ரோஜாவாய் மிளிர்ந்தது அவர்தம் ஆளுமைக் கலை!மழலையாக,சிறுவனாக, இளைஞனாக என்று வாழ்நாளின் ஆரம்பகட்டங்களிலும் சரி,நடுத்தர வயதில் இறைத்தூதராக,பண்பட்ட மூத்தவராக**



இன்றைக்கு கணவன் மனைவிக்கிடையில் நிறைய பிரச்னைகள் வரக் காரணம், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாததுதான்!

இதை கண்டிப்பாக சோம்பல் கொள்ளாமல் வாசியுங்கள் உங்கள் மனைவிமார்களை நேசியுங்கள்.

புரிதல் என்கிற ஒரு வார்த்தையில் தான் மண வாழ்க்கையின் வெற்றி என்பது உறுதியாகிறது. அந்தப் புரிதலைத் தருவது அன்பு!

இதற்கு ஒரு சிறு கதையை இங்கே நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். வேலைக்கு சென்ற கணவனை எதிர்பார்த்து மனைவி வீட்டில் காத்திருக்கிறாள்.

இருக்கின்ற இருவருக்குமாக தயார் செய்திருந்த மாவை வைத்து கணவனுக்காக இட்லி ஊற்றுகிறாள். மொத்தமாக 12 இட்லிகள் தான் அந்த மாவில் இருந்து அவளால் தயாரிக்க முடிந்தது.

சரி, கணவன் சாப்பிட்டது போக மீதம் இருப்பதை நாமும் சாப்பிட்டு இன்றைய பொழுதை கழித்துவிடலாம் என்று எண்ணியவாறே அவள் எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில், கணவன் தனது பால்ய சிநேகிதன் ஒருவனை கூடவே அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வருகிறான்.

அப்படி அழைத்துக் கொண்டு வந்தவன் "எனக்கும் என் நண்பனுக்கும் உணவு எடுத்து வா" என்று கூறினான். பின்னர் இருவரும் சாப்பிட அமர்கிறார்கள்.

அடுப்பறையில் இருப்பது 12 இட்லிகள் தான் என்பதை எப்படி கணவனுக்கு தெரிவிப்பது என்று குழம்பிய நிலையிலேயே இரண்டு தட்டுகளை எடுத்து வந்து கணவனுக்கும், அவனுடைய நண்பனுக்கும் வைத்து அதில் ஆளுக்கு நான்கு இட்லியை வைத்தாள்.மீதம் இருப்பது நாலு மட்டுமே என மனதுக்குள் படபடப்போடு கணக்கு வேறு போட்டுக் கொள்கிறாள்.

வைத்த வேகத்தில் நான்கு இட்லிகளையும் கணவன் வேக வேகமாக சாப்பிட்டுவிட பதற்றம் கொண்டவளாக இரண்டு இட்லியை எடுத்து கணவனுக்கு வைப்பதற்காக குனியும் வேளையில், கணவன், "எனக்குப் போதும். நாலு இட்லிக்கு மேலேயா சாப்பிடுவது...?" என்று சொன்னான்.

அருகில் ரசித்து, ருசித்து இன்னும் சில இட்லிகள் சாப்பிடலாம் என எதிர்பார்த்திருந்த விருந்தாளி நண்பனுக்கோ வெடுக்கென்று ஆனது!

> **அருகில் ரசித்து, ருசித்து இன்னும் சில இட்லிகள் சாப்பிடலாம் என எதிர்பார்த்திருந்த விருந்தாளி நண்பனுக்கோ வெடுக்கென்று ஆனது!**

அந்த நேரத்தில் இவளோ "அண்ணா உங்களுக்கு..." என கணவனின் நண்பரை நோக்கிக் கேட்க, "போதும்... போதும்... நான் எப்போதுமே மூன்று இட்லி தான் சாப்பிடுவேன்.இன்று உன் கைப் பக்குவம் நான்கு இட்லிகளை சாப்பிட்டுவிட்டேனம்மா..." என்று கூறி எழுந்தான் அந்த விருந்தாளி நண்பன்.!

கை கழுவச் செல்கையில் மனைவியை கடக்கின்ற போது "மீதமுள்ள நான்கை நீ சாப்பிட்டு விடு" என்று கணவன் சொல்ல, தன் இதயத்தில் மட்டுமல்ல தான் சமைத்த பாத்திரத்தில் கூட எத்தனை இட்லிகள் இருக்கின்றன என்பதை பார்க்காமலே, தன் பார்வையைக் கொண்டே கணக்கிட்டுக் கொண்டதோடு அந்த இக்கட்டில் இருந்தும் அழகாக தன்னை காத்திட்ட தன் கணவனை நினைத்து ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தாள் அந்தப் பெண்!

தகவல் அன்சார் - சம்மாந்துறை

து ன்பத்தை நினைத்து, மகிழ்ச்சியை இழக்காதே..!காதலை நினைத்து, வாழ்க்கையை இழக்காதே..! சோதனையை நினைத்து, சாதனையை இழக்காதே..!

facebook சமூக வலைதளத்திலிருந்து உம்மு அமீரா

# இது உங்கள் பக்கம்..!




## அழகு சாதனங்களா..? ஆபத்து இரசாயனங்களா..?

இயற்கை அழகு கொட்டிக்கிடக்கையில் மேலும் அழகுபடுத்துகிறேன் என்று கூறிக்கொண்டு பெண்கள் போட்டுக்கொள்ளும் அழகு சாதனப் பொருட்கள் உடல்நலத்திற்கே வேட்டு வைக்கின்றனவாம். கூந்தலுக்கு உபயோகிக்கும் ஷாம்பு தொடங்கி பாத நகங்களுக்கு போடும் நகபளப்பான் (Nail Polish) வரை பெண்கள் உபயோகிக்கும் அழகு சாதனப் பொருட்களின் மூலம் தினசரி 500-க்கும் மேற்பட்ட ரசாயனங்கள் நம் உடம்பிற்குள் புகுவதாகவும் அதனால் கேடு விளைவிப்பதாகவும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.புரிந்ததா.., தோழியரே..!

வளைகுடா தேசம் பெண் உரிமைகளை நசுக்கும் உலகைக் கொண்டது எனும் மாயை உலகம் முழுவதும் நிலவுகின்றது.இதிலிருந்து விலகி, இஸ்லாமிய வழிமுறைகளை மீறாமல் முதல் முறையாக இப்பிரதேசத்தின் ஐக்கிய அரபு அமீரக துபை, மெட்ரோ தொடர் வண்டியின் ஓட்டுநராக நியமிக்கப்பட்டுள்ளார் சகோதரி மர்யம் அல்-ஸஃபர்!மத்திய கிழக்கு நாடுகளிலேயே முதல் பெண் தொடர்வண்டி ஓட்டுநர் எனும் சிறப்பு பெற்ற சகோதரி மர்யம் அமீரக குடிமகள் ஆவார்!



## அமீரகத்தின் முதல் பெண் தொடர்வண்டி ஓட்டுநர்



## ஹாட்ஸ் ஆஃப் ஹாதியா..!

மீண்டும் ஒரு முறை செய்திகளில் வந்திருக்கின்றார் இந்த பதின்பருவ முஸ்லிம் பாவை..!ஆம்!ஏற்கனவே ஹிஜாபுடன் பள்ளிக்கு வருவதைத் தடுத்த பள்ளி நிர்வாகத்துக்கு எதிராக வெற்றி பெற்ற மங்களூர்வாசியான செல்வி ஹாதியா, இம்முறை பர்தாவுடன் தன்னை தேர்வு எழுத அனுமதிக்காத நிர்வாகத்தை எதிர்த்து சட்டரீத்யாக ஜயம் ஈட்டியிருக்கின்றார் இந்த மேல்நிலைக் கல்வி மாணவி!ஹாட்ஸ் ஆஃப் ஹாதியா.

## அழகிய நெறியை ஆரத் தழுவும் ஆங்கிலேய அனங்கையர்..!



பிரிட்டனில் இஸ்லாத்தை தழுவும் பெண்களின் எண்ணிக்கையோ அதிகரித்து வருகின்றது. இலண்டன் மத்திய மசூதியில் (London Central Mosque,Regent Park) இஸ்லாத்தை தழுவும் மூவரில் இருவர் பெண்கள். அவர்களில் பெரும்பாலானோர் முப்பது வயதுக்கும் குறைந்தவர்கள். இருபதுகளில் மற்றும் முப்பதுகளில் உள்ள படித்த பிரிட்டன் இளைஞிகள் இஸ்லாத்தை தழுவுவது அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்று ஸ்வான்ஸீ பல்கலைக்கழகத்தின் கெவின் ப்ரைஸ் கூறியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த கிரிக்கெட் வீரரான ஹாஷிம் ஆம்லா, கிரிக்கெட் விளையாட்டிலும் மார்க்க நெறிமுறைகளிலிருந்து பிறழாமல் வாழ்பவர்.அவருடைய துணைவியும் இதிலிருந்து விதிவிலக்கல்ல..!அரைகுறை ஆடைகளுடன் ஏனைய வீரர்களின் மனைவிமார்களும் பெண் நண்பிகளும் வீற்றிருக்க சற்றும் சங்கோஜம் இன்றி,ஹிஜாபுடன் அமர்ந்து தன் கணவரின் ஆட்டத்தை ரசிக்கின்றார்

## இதுதான் மார்க்கம்..!

இந்த அனங்கை.தொழுகை நேரம் வந்துவிட்டால், தனது கணவரின் செஞ்சுரிக்காக காத்திராமல் நேரே தொழுகைக்கு எழுந்து சென்றுவிடுகின்றார்.வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், ஏனைய வீரர்களின் மனைவிமார்களுக்கு இஸ்லாமிய தூதை எத்தி வைப்பதில் சிறிதும் சளைப்பதில்லை இந்த இளம் முஸ்லிம் மனைவி..!



## துப்பாக்கி தாரகை..!

மலேஷியா சார்பாக ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்துகொள்ள இருக்கின்றார் திருமதி நூர் சூர்யானி முஹம்மத் தைபி!இதில் விசேஷம் என்னவென்கின்றீர்களா..?கோடைக் காலத்தில் நடைபெற இருக்கும் இப்போட்டியில் கலந்துகொள்ளும்போது அவர் எட்டு மாத கர்ப்பிணியாக இருப்பார்.மருத்துவர்களும்,ஒலிம்பிக் கமிட்டியும் உடல்ரீதியாகக் கடினப்பட வேண்டிய விளையாட்டு அல்ல என்பதால் அவருக்கு அனுமதி வழங்கிவிட்டனர்.இறைநாட்டத்ததால் பதக்கம் வெல்வேன் என் மழலையின் உதைகளைத் தாங்கிக்கொண்டே..!" என்கின்றார் இந்த துப்பாக்கி மங்கை..!




## துபை அமைதி மாநாடு..!



துபை அரசு, முஹம்மது பின் ராஷித் அல் மக்தூம் உலக அமைதி விருது கமிட்டியினர், அல் மனார் சென்டர் ஒத்துழைப்புடன் வருடந்தோறும் நடத்தி வரும் துபை சர்வதேச அமைதி மாநாடு இந்த வருடம் 'உண்மையான அமைதியின் மூலம் உலகை ஒன்றிணைப்போம்' என்ற இலக்குடன் நடைபெறவுள்ள இம்மாநாட்டின் கருத்தரங்கில் டாக்டர்.ஜாகிர் நாயக் உட்பட சர்வதேச அளவில் நல்லறிமுகமுள்ள அழைப்பாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்..!

## பலவந்த குடும்பக் கட்டுப்பாட்டு



மத்திய ஆசியாவில் உள்ள பிபிசி நிருபர் ஒருவர் உஸ்பெகிஸ்தான் நாட்டில் உள்ள பெண்களிடம் பேசியபோது, அவர்களுக்கு தெரியாமலும், அவர்களின் ஒப்புதல் பெறாமலும் கருத்தடை செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. சில பெண்களுக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுத்தவுடன் அவர்களின் கர்ப்பப்பை அகற்றப்பட்டுள்ளது. ஃபலோப்பியன் டியுப் எனப்படும் கரு வெளியேறும் குழாயை முடிச்சுப் போட்டு - முட்டை வெளியேறாதவாறு - இந்த சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.சுகாதார அமைச்சகம் நிர்ணயித்துள்ள குடும்பக் கட்டுப்பாட்டு இலக்குகளை தாங்கள் எட்ட வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு இல்லை என்று அரசு திட்டவட்டமாக மறுக்கிறது.

### புங்க மர விதையில் பயோ டீசல் :

## முஸ்லீம் மாணவிகள் சாதனை !



நாகை மாவட்டம், மயிலாடுதுறை அடுத்த வடகரையில் உள்ள ஹாஜா சாரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவியர், பள்ளி நிர்வாகி ஜியாவுதீன் மற்றும் முதல்வர் குணசேகரன் ஆகியோர் உதவியுடன், புங்க மர விதையிலிருந்து எடுக்கப்பட்ட பயோ டீசலை கொண்டு, வாகன இன்ஜின்களை இயக்க முடியும் என கண்டுபிடித்துள்ளனர்.

நாகை கலெக்டர் முனுசாமி முன்னிலையில், முஸ்லீம் மாணவிகள் செயல் முறை விளக்கம் காண்பித்தனர். முதலில், டீசலை கொண்டும், பின் தாங்கள் கண்டுபிடித்துள்ள புங்க மர விதையிலிருந்து எடுக்கப்பட்ட பயோ டீசலை கொண்டும், தொடர்ந்து கார் இன்ஜினை இயக்கிக் காண்பித்தனர்.

போட்டியில் பங்கு பெறுங்கள்! பெறுமதியான பரிசு வெல்லுங்கள்!!

# மகளிர் சிறப்பிதழ் சிறப்பு அறிவுப்போட்டி!

1

“அரசியல் உரிமைகள் கிடைக்கா விட்டாலும், வாழும் தகுதியான மனித உரிமை யாவது கிடைக்க வேண்டும்”

- அஸ்மா மஹ்ஃபூஸ்

2

“இஸ்லாத்தை ஏற்ற பின் நடிக்கும் தொழிலையும், குடி,புகை போன்ற தியபழக்கங் களையும் விட்டு விட்டேன்..!”

- ஆம்னா ஃபாரூகி

3

“வரும் ஃபிரான்ஸ் பொதுத் தேர்தலில் நானும் போட்டியிடப் போகின் றேன்..!”

- கென்ஸா டிரைடர்


## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆன்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 05. 2012 10. முடிவுகள் வசந்தம் ஆகஸ்ட் 2012 இதழில் வெளியாகும். இறை நாடின்.!

இந்த இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா? இனி, மேற்சொன்ன கூற்றுக்களுக்கு உரியவர்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு அருகே உள்ள வட்டத்தில் கூற்றுக்குரியவர்களின் பொருத்தமான எண்களை இடுக..!







பெயர் Name

குவைத் அடையாள அட்டை
அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்/நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait

# குஜராத் 10

தொடர்கதையாய் தொடரும் துயரங்கள்..!
மறுக்கப்பட்ட நீதிகள்..!
தவித்துப் போன தூங்கா நகரங்கள்..!
பொய்த்த நம்பிக்கைகள்..!
உயிர் குடிக்கும் கலவர பூதங்கள்..!
துர்ப்பாக்கிய துப்பாக்கி நீதிகள்..!




சாமான்யர்களின் அச்சக்குரல்கள் அகற்றப்பட்டிருக்கின்றதா..?
கலவரங்களால் ஒடுக்கப்பட்டோரும்,சிறுபான்மையினரும் மட்டுமே பாதிப்புக்குள்ளாவதேன்..?
கலவரங்களை களையெடுக்க முடியாதா..?
சுதந்தர பாரதம் இதுவரை கண்ட கலவரங்கள்..!



# ஓ.., மகளிர் மாந்தரே..!





காலக் கடிகாரத்தின் நாழிகை முட்கள் நீங்கள்..!
உங்கள் ஆளுமைச் சுழற்சியே,
வாழ்வின் நிமிடங்களையும்,
மணிநேரங்களையும் உன்னதமாக்கும்..!
உம் ஆளுமையை சிறப்பாக்கிக் கொள்வீர்..!
வாழ்வில் ஜயம் ஈட்டுவீர்..!!

